தினமணி

**சூரியகாந்தி அறுவடை - செய்ய வேண்டியவை**

First Published : 18 Mar 2010 12:49:39 AM IST



விருத்தாசலம், மார்ச் 17: சூரியகாந்தி அறுவடைக்குப் பின் செய்ய வேண்டிய நேர்த்தி தொழில் நுட்பங்கள் குறித்து வேளாண் துணை இயக்குநர் அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் மங்களூர், தொழுதூர், ஆவட்டி, வேப்பூர், மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் தற்போது சூரியகாந்தி அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

எண்ணெய் வித்துப் பயிரான சூரியகாந்தியில் எண்ணெய் அளவு குறையாமலும், தரம் கெடாமல் காத்திடவும், நல்ல லாபமான விலையில் விற்றிடவும் கீழ்கண்ட நேர்த்தி முறைகளை வேளாண்மை துணை இயக்குநர் தனவேல் மற்றும் விருத்தாசலம் கோட்ட வேளாண் அலுவலர் அமுதா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அதன் விவரம்:

சூரியகாந்தி பயிரின் இலைகள் பழுத்து மஞ்சள் நிறமாக மாறியும், பூக்கொண்டைகள் பழுப்பு நிறமாக மாறியும் இருந்தால் பயிரை அறுவடை செய்யலாம்.

விதைகளை சோதித்துப் பார்த்தால் மேல்புறம் கருமையானதாகவும், உட்புறம் வெள்ளை நிறமாகவும், கடினமானதாகவும் இருக்கும்.

சூரியகாந்தி பூத்தலையை மட்டும் அறுவடை செய்ய வேண்டும். பூத்தலையை ஒரே சீராகப் பரப்பி களத்தில் காயவைத்து 3 மணி நேரத்துக்கு ஒருமுறை திருப்பிவிட வேண்டும்.

பூத்தலைகளை அறுவடை செய்தவுடன் வெய்யலில் பரப்பி காயவைக்க வேண்டும்.

பூத்தலைகளை குவித்து சேமித்தால் விதைகளை பூஞ்சாணம் தாக்கி மணிகளின் தரம் பாதிக்கப்படும். காய்ந்த பூக்களிலிருந்து விதைகளைப் பிரித்து எடுக்க கதிர் அடிக்கும் இயந்திரம் அல்லது தடிகள் கொண்டு அடித்து பிரிக்க வேண்டும்.

பிரித்து எடுத்த விதைகளை காற்றில் தூற்றிவிட்டு அயல் பொருள்களான கல், மண், தூசு, பூக்களின் சருகுகள் மற்றும் இலைகள் இல்லாமல் சுத்தம் செய்ய வேண்டும். ÷

நல்ல விதையுடன் கலந்துள்ள சுருங்கிய முதிராத விதைகளையும், கெட்டுப் போன விதைகளையும், பூச்சி, நோய் தாக்கிய விதைகளையும் தனியே பிரித்து எடுத்துவிட வேண்டும்.

தரம் பிரித்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு கொண்டு வந்து விற்பதன் மூலம் அதிக லாபம் பெறலாம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**பருத்திக்கு இது நல்ல காலம்...**

First Published : 18 Mar 2010 12:47:41 AM IST



விழுப்புரம், மார்ச் 17: தற்போதைய நிலையில் பருத்தி பயிரிடவும், இருப்பை விற்கவும் உகந்த நேரம். பருத்தியின் விலை சீராக இருக்கும் என்று வேளாண் அலுவலர்கள் கணக்கிட்டுள்ளனர்.

உலகப் பருத்தி உற்பத்தியில் சீனாவை அடுத்து, இந்தியா 2-ம் இடத்தை வகிக்கிறது. கடந்த ஆண்டில் (அக்டோபர் 2008-செப்டம்பர் 2009) பொருளாதாரப் பின்னடைவால் ஏற்பட்ட ஏற்றுமதி சரிவால் பருத்தியின் விலை குறைந்திருந்தது. மத்திய அரசு பருத்திக்கான குறைந்தபட்ச ஆதார விலையை 30 சதவீதம் உயர்த்தி அறிவித்தது. இது பருத்தி விவசாயிகளுக்கு உதவியது.

ஆனால் நடப்புப் பருத்தி ஆண்டு தொடக்கத்திலிருந்தே (அக்டோபர் 2009) விலை ஏறுமுகமாக இருந்ததோடு குறைந்தபட்ச ஆதார விலையைவிட அதிகமாக உள்ளது.

கடந்த ஆண்டு ஒரு குவிண்டால் ரூ.2,850-க்கு விற்ற சங்கர் 6 ரகம், இந்த ஆண்டு குவிண்டால் ரூ.3,400 முதல் ரூ.3,600 வரை விலை போகிறது. மேலும் இந்த ஆண்டில் பருத்தி ஏற்றுமதியும் அதிகரித்து 55 லட்சம் பொதிகளாக இருக்கும். இது கடந்த ஆண்டு 35 லட்சம் பொதிகள் மட்டுமே.

உலகப் பொருளாதாரம் தற்போதும் பின்னடைவு நிலையிலேயே உள்ளதால், 55 லட்சம் பொதிகளுக்கு மேல் அதிகரிக்க வாய்ப்பில்லை. இதுவரை ஏற்றுமதிக்கு 51 லட்சம் பொதிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவில் 94.06 லட்சம் ஹெக்டேராக இருந்த பருத்தி சாகுபடிப் பரப்பு 2009-2010-ல் 101 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. அதிக அளவில் பருத்தி உற்பத்தி செய்யும் மாநிலமான குஜராத்தில் நிலக்கடலைக்கு மாற்றுப் பயிராக பருத்தி பயிரிடப்பட்டது. மேலும் மொத்தப் பருத்தி சாகுபடிப் பரப்பு அதிகரித்துள்ளதால் கடந்த ஆண்டைவிட உற்பத்தி அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. பருத்தி ஆலோசனைக் கழகத்தின் கணக்கீட்டின்படி, இந்த ஆண்டு உற்பத்தி 295 லட்சம் பொதிகளாக இருக்கும். இதுவரை 200 லட்சம் பொதிகள் சந்தைக்கு வந்துள்ளன.

தமிழகத்தைப் பொறுத்தவரை 2009-10-ல் பருத்தி சாகுபடிப் பரப்பு 1.09 லட்சம் ஹெக்டேரிலிருந்து 0.87 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. விவசாயிகள் பி.டி. பருத்தியான பன்னி மற்றும் டி.சி.எச்.32 ஆகியவைகளை அதிகம் பயிரிடுகின்றனர். டி.சி.எச்.32 மிக நீண்ட இழை பருத்தி வகையைச் சேர்ந்தது. இதற்கு மற்ற பருத்தி ரகங்களை விட ரூ.800 முதல் ரூ.1,000 வரை அதிக விலை கிடைக்கிறது. விவசாயத் தொழிலாளர்களின் தட்டுப்பாடு பருத்தி சாகுபடிப் பரப்பு குறைந்ததற்கு ஒரு காரணமாகும்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது மின்வெட்டு குறைக்கப்பட்டுள்ளதால், பஞ்சாலைகளின் பருத்தியின் தேவை அதிகரித்துள்ளது. குறைந்த மழையளவு, மாற்றுப் பயிரான மக்காச்சோளத்துக்கு மாறிய காரணங்களால் தமிழ்நாட்டில் பருத்தி சந்தைகளில் வரத்து கடந்த ஆண்டைவிட குறைந்துள்ளதாக வேளாண் அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து விழுப்புரம் வேளாண் வணிக துணை இயக்குநர் என். தனவேல் கூறியது:

மாசிப் பட்டத்தில் (பிப்ரவரி-மார்ச்)  ராஜபாளையம், விருதுநகர் மற்றும் காவிரி டெல்டா பகுதிகளில் பருத்தி விதைப்பு மேற்கொள்ளப்படுகிறது. பருத்தி விவசாயிகளின் விதைப்பு மற்றும் விற்பனை முடிகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், திருப்பூர் பருத்திச் சந்தையின் 15 வருட விலை நிலவரத்தை ஆய்வு செய்தது.
÷மேலும் பருத்தி வர்த்தகர்களிடம் ஆய்வு நடத்தியது. இந்த ஆய்வு முடிகளின்படி நீண்ட இழை பருத்தி வகைகளுக்கு மார்ச் 2010 முதல் செப்டம்பர் 2010 வரை குவிண்டாலுக்கு ரூ.3,300 முதல் ரூ.3,500 வரை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.
எனவே விவசாயிகள் மாசிப் பட்டத்தில் குறைந்த சாகுபடி செலவில் பருத்தி பயிர் செய்து பயனடையலாம். அதே நேரத்தில் தற்போது பருத்தி இருப்பு வைத்திருக்கும் விவசாயிகள் அதை விரைவில் விற்பனை செய்யலாம். இதற்கு மேல் விலையேற்றத்துக்கு வாய்ப்புகள் குறைவு என்றார்.

**மஞ்சள் அறுவடை - சில நுணுக்கங்கள்**

First Published : 18 Mar 2010 12:46:26 AM IST



விருத்தாசலம், மார்ச் 17: மஞ்சள் அறுவடையில் அதிக லாபம் பெறும் வழிமுறைகள் குறித்து அறிவிக்கப்படுகிறது. கடலூர் மாவட்டத்தில் மங்களூர், சிறுபாக்கம், நாரையூர், அரசங்குடி, வடபாதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் தற்போது மஞ்சள், அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. மஞ்சள் தரம் பிரிப்பு மற்றும் அறுவடைக்குப் பின் செய்ய வேண்டிய நேர்த்தி தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண் துணை இயக்குநர் தனவேல் மற்றும் விருத்தாசலம் கோட்ட வேளாண்மை அலுவலர் அமுதா ஆகியோர் வெளியிட்டுள்ள விவரம்:
மஞ்சள் 9-10 மாதங்களில் அறுவடைக்கு வரும் பயிராகும். இலைகள் மஞ்சள் நிறமாக மாறி, காய்ந்து விழுவதன் மூலம் பயிரின் முதிர்ச்சியை அறிந்து கொள்ளலாம். மஞ்சள் பயிரின் தண்டை 10 நாள்களுக்கு முன்பாக தரையின் மேல் மட்டத்தில் 10 செ.மீ. விட்டு அறுத்துவிட வேண்டும். இதனால் மஞ்சளின் ஈரப்பதம் குறைவதுடன் விரைவில் முதிர்ச்சி அடையும். மஞ்சள் கொத்து என்ற கருவியை பயன்படுத்தி மஞ்சளை கொத்தி எடுக்க வேண்டும்.
பதப்படுத்துதல்
மஞ்சளை பதப்படுத்துதல் முக்கிய நேர்த்தியாகும். ஈர மஞ்சளிலிருந்து ஐந்தில் ஒரு பகுதி பதப்படுத்திய மஞ்சள் கிடைக்கும். பச்சையான மஞ்சளை சுத்தமான நீரில் வேக வைக்க வேண்டும். மஞ்சள் வெந்துவிட்டது என்பதை வேகும் வாசனை வருவதைக் கொண்டு அறியலாம். அப்போது வேக வைப்பதை நிறுத்துவிட்டு விரல் கொண்டு மஞ்சளை

அழுத்தி வெந்து விட்டதா என்பதை கண்டறியலாம். அதிகமாகவும் மஞ்சளை வேக வைக்கக்கூடாது. நிறம் மங்கி விடும். மஞ்சளை சரியாக வேக வைக்காவிட்டால் காயவைக்கும்போது மஞ்சள் உடைந்து சிறு சிறு துண்டுகள் ஆகிவிடும். வேக வைத்த மஞ்சளை வெய்யிலில் 7 செ.மீ. உயரத்துக்கு பரப்பி 15 நாள்கள் வரை காயவைக்க வேண்டும். காய வைக்கப்பட்ட மஞ்சளில் சிறு சிறு வேர்களும், செதில்களும் கலந்து இருந்தால் அதை சுத்தப்படுத்த வேண்டும். மஞ்சளுக்கு மெருகேற்றுவது மிகவும் அவசியம். மெருகேற்றும் கருவியைக் கொண்டோ, கூடைகளைக் கொண்டோ மஞ்சளை மெருகேற்ற வேண்டும். மஞ்சளுக்கு நிறமேற்றுவதும் மிகவும் அவசியம். 100 கிலோ மஞ்சளை மெருகேற்ற படிகாரம் 40 கிராம், மஞ்சள்தூள் 2 கிலோ, ஆமணுக்கு எண்ணெய் 140 கிராம், சோடியம்-பை-சல்பேட் 30 கிராம், ஹைட்ரோ குளோரிக் அமிலம் 30 மி.லி. சேர்த்து தயாரிக்கப்பட்ட கரைசலைக் கொண்டு நிறம் ஏற்றலாம். மஞ்சள் பொடியுடன் ஆல்கஹால் சேர்த்து கரைசல் தயாரித்து மஞ்சளுக்கு நிறம் ஏற்றலாம். மஞ்சளை தரம் பிரித்து விற்பதன் மூலம் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும் எனத் தெரிவித்துள்ளனர்.

**பாசனக் கால்வாய் சீரமைப்புக்கு ரூ. 3.40 கோடி திட்ட மதிப்பீடு தயாரிப்பு**

First Published : 18 Mar 2010 01:38:39 AM IST

நாகர்கோவில், மார்ச் 17: கன்னியாகுமரி மாவட்டத்தில் பாசனக் கால்வாய்கள் மற்றும் ஷட்டர்களை சீரமைக்க ரூ. 3.40 கோடியில் திட்டம் தயாரிக்கப்பட்டு, அரசிடம் நிதி கோரப்பட்டுள்ளது என, பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் சிறில் கிறிஸ்டோபர் தெரிவித்தார்.

நாகர்கோவிலில் புதன்கிழமை நடைபெற்ற கோதையாறு வடிநிலப் பகுதி நீர் பயனீட்டாளர் சங்கக் கூட்டத்தில் பங்கேற்ற அவர் கூறியதாவது: மாவட்டத்தில் கன்னிப்பூ சாகுபடிக்கு கால்வாய்களில் தண்ணீர் திறந்துவிடும் முன் கால்வாய்களைத் தூர்வாரி சீரமைக்க ரூ. 2 கோடியிலும், ஷட்டர்களை பழுதுநீக்கி சீரமைக்க ரூ. 1.40 கோடியிலும் திட்டம் தயாரிக்கப்பட்டு, அரசின் திட்ட மதிப்பீடு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் மாவட்டத்தில் இந்தப் பணிகளுக்காக அரசு ரூ. 1.60 கோடி ஒதுக்கீடு செய்திருந்தது.

மாவட்டத்திலுள்ள குளங்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணிக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாவட்டத்திலுள்ள அணைகளில் குறைந்த அளவே தண்ணீர் உள்ளது. மொத்தமாக அணைகளில் 1 டிஎம்சி தண்ணீர் மட்டுமே உள்ளது. 2 டிஎம்சி தண்ணீர் இருந்தால்தான் வரும் கன்னிப்பூ சாகுபடிக்கு அனைத்துக் கால்வாய்களிலும் பாசனத்துக்காக தண்ணீர் திறக்க முடியும்.

எனவே பாசனக் குளங்களில் இருந்து வீணாக தண்ணீரைத் திறக்கக் கூடாது. இது தொடர்பாக ஏதேனும் புகார்கள் வந்தால் போலீஸ் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

**சிவன்மலையில் மூலிகை மருத்துவக் கண்காட்சி**

First Published : 18 Mar 2010 02:40:37 AM IST

தாராபுரம், மார்ச் 17: திருப்பூர் மாவட்டம், சிவன்மலையில் மூலிகை மருத்துவக் கண்காட்சி, விழிப்புணர்வு முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

÷மக்கள் மருத்துவ இயக்கம் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, இயக்கச் செயலர் ஜி.ராம்மோகன் தலைமை வகித்தார். திருப்பூர் மாவட்ட சித்த மருத்துவ சங்கத் தலைவர் மு.தணிகாசலம், செயலர் வி.ஆர்.கிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். டி.ஸ்டேன்ஸ் நிறுவன மூலிகைப் பிரிவு மேலாளர் ஜி.கே.சதீஷ் வரவேற்றார்.

÷கண்காட்சியைத் திறந்து வைத்து திருஞான சம்பந்தர் அறக்கட்டளைச் செயலரும், மக்கள் மருத்துவ இயக்கத் தலைவருமான எம்.ஜெய்லானி பேசியது:

÷நோயற்ற உடலைக் கொண்டவர்கள்தான் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ முடியும். அவர்களது அறிவும் மேம்பட்டதாக இருக்கும். எனவே ஒவ்வொருவரும் நோயற்ற வாழ்வதற்கான வழிகளைத் தேடிக் கொள்ள வேண்டும்.
÷உலகிலேயே சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியாவில்தான் இயற்கையான மூலிகை வளம் அதிகமாக உள்ளது. உலகம் முழுவதும் ரூ. 5,100 கோடிக்கு மூலிகை மருந்துகள் தேவைப்படுகின்றன. ஆண்டுதோறும் 40 ஆயிரம் டன் மூலிகை மருந்துகளை இந்தியா ஏற்றுமதி செய்கிறது. இதன் மதிப்பு ரூ.480 கோடி.
÷எனவே மூலிகை மருந்து உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு ஏதுவாக, மூலிகை மற்றும் மூலிகை மருந்து ஏற்றுமதி கவுன்சிலை மத்திய அரசு அமைக்க வேண்டும். ஐரோப்பாவில் இயற்கை மருத்துவத்தை தேசியநலக் காப்பீடு திட்டத்தில் சேர்த்துள்ளனர். எனவே தமிழகத்தில் செயல்படுத்தப்படும் உயிர் காக்கும் உயர்சிகிச்சைக்கான காப்பீட்டுத் திட்டத்திலும், தமிழ் மருத்துவமான சித்த மருத்துவத்தைச் சேர்க்க வேண்டும்.
÷தற்போது ஆங்கில மருத்துவத்துக்கு மட்டுமே காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நோயாளி விரும்பினாலும், மூலிகை மருத்துவ சிகிச்சை இத்திட்டத்தில் பெற முடியாமல் உள்ளது. இது மனித உரிமையைப் பறிப்பதாகும். எனவே மூலிகை மருத்துவத்தை அரசின் காப்பீட்டுத் திட்டத்தில் உடனடியாக சேர்க்க வேண்டும், என்றார் எம்.ஜெய்லானி.

திருப்பூர் மாவட்ட சித்த மருத்துவ சங்கப் பொதுச்செயலர் ந.குமாரசாமி, மருத்துவர்கள் சி.ஆர்.முருகேசன், ரவிசங்கர், சண்முகசாமி, ஆசைத்தம்பி, ஆர்.சதாசிவம், எஸ்.ராஜேஸ்வரி, கிருஷ்ணசாமி, முருகேசன், மணி, கோவிந்தராஜ் ஆகியோர் பேசினர். டி.பி.நூருல்லா நன்றி கூறினார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 79.11 அடி**

First Published : 18 Mar 2010 01:09:57 AM IST

பவானி,மார்ச் 17:பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை 79.11 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 442 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. பாசனத்துக்கு வாய்க்காலில் விநாடிக்கு 5 கன அடியும், ஆற்றில் விநாடிக்கு 600 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 15 டிஎம்சி.

தினமலர்

**பண்ணைத் தொழிலாளர் 2,346 பேர் பணி நிரந்தரம்: வேளாண் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பேச்சு**

கோவை: "வேளாண் பல்கலையில் 2007 முதல் 2009 வரை தற்காலிகமாக பணிபுரிந்து வந்த 2,346 பண்ணைத் தொழிலாளர்கள் பணி நிரந்தம் செய்யப்பட்டுள்ளனர். இதர கோரிக்கைகளையும் அரசு பரிசீலிக்கும்," என, தமிழக வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் கூறினார்.

வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்துக்கு, கோவை வேளாண் பல்கலை பண்ணைத் தொழிலாளர் சங்கம் சார்பில் பாராட்டு விழா நடத்தப்பட்டது.விழாவில், அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பேசியதாவது: தொழிலாளர் நலனில் அக்கறையுள்ள தி.மு.க., அரசு, அனைத்து தேவைகளையும் நிறைவேற்றி வருகிறது. கடந்த ஆட்சியில் புதிய

நியமனத்துக்கும் புதிய கோரிக்கைகளுக்கும் தடை விதிக்கப்பட்டது. சலுகைகள் பறிக்கப்பட்டன. எதிர்த்த அரசு ஊழியர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டனர்.இரவோடு இரவாக வீட்டுக்குள் புகுந்து கைது செய்தனர். இந்த ஆட்சியில் தொழிலாளர்களின் உரிமைக்கு மதிப்பு அளிக்கப்பட்டு, 16 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள், அரசு துறைகள் மூலம் செயல்படும் நல வாரியங்கள் என 29 வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 11 லட்சத்து 96,705 பேர் பயன் அடைந்துள்ளனர். தற்காலிக தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட்டு வருகின்றனர். ஆண்டுக்கு 150 பேர் வீதம், ஐந்து ஆண்டுகளில் 750 பேர் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

20 ஆண்டுகளாக தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வந்த 1,193 பேர் 2007-2008ல் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர். 15 ஆண்டுகளாக தினக்கூலிகளாக இருந்த 953 பேர் 2008-2009ல் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர். 2,346 பேர் பணி நிரந்தரம் செய்யப்படுகின்றனர்.மேலும் 10 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த 980 பேரை நிரந்தரம் செய்யவும் அரசு பரிசீலித்து வருகிறது.அவர்களின் பட்டியல் தயாராகி வருகிறது. தினக்கூலியின் அடிப்படையில் பணிபுரியும் 1,083 பேரை காலமுறை ஊதியத்தின்படி பணிவரன்முறை செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. 2007-2008ல் 80 ரூபாய் தினக்கூலியின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்களுக்கு 100 ரூபாய் ஆக கூலி உயர்த்தப்படும். அரசு ஊழியர்களைப் போல் இதர சலுகைகளும் வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலிக்கப்படும். சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்களைப் போல் பண்டிகைக்கால முன்பணமும் அரசிடம் பேசி பெற்றுத் தரப்படும். அனைத்து பிற கோரிக்கைகளும் உரிய காலத்தில் நிறைவேற்றப்படும். இனி எவரும் போராட்டம் நடத்த தேவையில்லை. புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு கொண்டு செல்ல பண்ணைத் தொழிலாளர்கள் ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு, அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பேசினார். வனத்துறை அமைச்சர் செல்வராஜ், பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி, பதிவாளர் சுப்பையன், தொழிலாளர் சங்கத் தலைவர்கள் உட்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாய பண்ணைத் தொழிலாளர்கள் திரளாக பங்கேற்றனர்.

**கால்நடை சிகிச்சை முகாம்**

அரியலூர்: அரியலூர் அருகில் உள்ள காவனூரில் இலவச கால்நடை சிகிச்சை முகாம் நடந்தது. கால்நடை உதவி மருத்துவர் (பொ) ராமச்சந்திரன், டாக்டர்கள் ராமதுரை, குமார், கவுதமன் ஆகியோர் கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தனர். 246 கால்நடைகளுக்கு சப்பை நோய் தடுப்பூசி போடப்பட்டது. 306 வெள்ளை ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. 54 பசு மாடு மற்றும் 306 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. பத்து ஆடு, ஆறு பசுக்கள் உட்பட மொத்தம் 552 கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

**பொள்ளாச்சி சந்தைக்கு வாழை வரத்து குறைந்தது**

பொள்ளாச்சி: தமிழகத்தில், வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், வாழை விளைச்சல் குறைந்துள்ளது.பொள்ளாச்சி சந்தையில் தூத்துக்குடி, காட்டுபுதூர், குளித்தலை, தேனி, கம்பம் பகுதிகளிலிருந்து சந்தைக்கு வாழைத்தார் வரத்துள்ளது. தற்போது, வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், வாழை விளைச்சல் குறைந்துள்ளது. இதனால், சந்தைக்கு வரத்து குறைந்துள்ளது. வழக்கமாக, மூன்றாயிரம் தார் வரத்திருக்கும் இம்மாதம் ஆயிரம் தார் மட்டுமே வந்துள்ளது. இதில், வால்பாறைக்கு 200 தார்களும், கேரளப்பகுதிகளுக்கு 500 தார்களும், உடுமலை, கிணத்துக்கடவு பகுதிகளுக்கு 150 தார்களும் அனுப்பப்படுகின்றன. இதனால், கணிசமாக விலை உயர்ந்துள்ளது. 160 ரூபாய்க்கு விற்ற பூவன் தார் 190 ரூபாய்க்கும், 150 ரூபாய்க்கு விற்ற மோரிஸ் 210 ரூபாய்க்கும், கற்பூரவல்லி -220, ரஸ்தாளி - 240, செவ்வாழை - 400,

நேரத்திரம் கிலோ 13 ரூபாய்க்கும், 'ராணி' பூவன் கிலோ 15 ரூபாய்க்கும் விற்றது. வியாபாரிகள் கூறியதாவது: வாழையில் தூத்துக்குடி சீசன் முன்கூட்டியே துவங்கியிருப்பினும், வெயில் தாக்கதால், காய்ப்பு குறைந்துள்ளது. முகூர்த்த நாட்கள் இருப்பதால், சந்தையில் வாழைத்தாருக்கு 'கிராக்கி' உள்ளது. அடுத்த வாரம் வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. விலையும் சரியும் வாய்ப்புள்ளது என்றனர்.

**விவசாயிகளுக்கு மானியத்தில் உர மூட்டைகள்**

திட்டக்குடி: மங்களூர் வட்டார செம்மை நெல் சாகுபடி விவசாயிகளுக்கு மானியத்தில் உரங்கள் வழங்கப்பட்டன.மங்களூர் வட்டாரத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் செம்மை நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு 3 ஆயிரம் ரூபாய் மானியத்தில் எக்டேருக்கு டி.ஏ.பி., மற்றும் பொட் டாஷ் உரம் தலா ஒன்று வழங்கப்படுகிறது. ஆவினங்குடி தொடக்க வேளாண் கடன் சங்கத்தில் வேளாண் உதவி இயக்குநர் பன்னீர்செல்வம் 30 விவசாயிகளுக்கு உர மூட்டைகளை வழங்கினார். இதேபோல தொழுதூரில் 30, இடைச்செருவாய் 30, ம.புடையூர் 60 என 150 விவசாயிகளுக்கு உர மூட்டைகள் வழங்கப்பட்டன. துணை வேளாண் அலுவலர் டென்சிங், வேளாண் உதவி அலுவலர் குணசேகரன், உதவி அலுவலர்கள் பிரகாஷ், சின்னதுரை, ரமேஷ் உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் விவசாயிகளுக்கு வயல்வெளிப்பள்ளி**

புவனகிரி: புவனகிரியில் தேசிய உணவு பாதுகாப்பு திட் டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிறுவகை பயிர் கள் குறித்து வயல்வெளிப் பள்ளி வகுப்பு நடந்தது.வேளாண் உதவி இயக் குனர் கனகசபை தலைமை தாங்கினார். பயிற்சியில் 30 விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண் அலுவலர் ஞானசேகரன் முன்னிலையில் சுற்று சூழல் ஆய்வு, உளுந்து பயிரில் நன்மைகள் மற்றும் தீமைகள் செய்யும் பூச்சிகள் குறித் தும், அத்தகைய பூச்சிகளை இனம் கண்டறிய பயிற்சி அளிக்கப் பட்டது. மேலும் உளுந்து பயிறுக்கு மருந்துகள் தெளிப் பது குறித்து செயல் விளக் கம் அளிக்கப்பட்டது. ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் நடனசபாபதி, வீரலிங் கம், பாக்கியராஜ் செய்திருந்தனர்.

**பீன்ஸ், கேரட்விலை அதிகரிப்பு**

திண்டுக்கல்: கடந்த வாரத்தை விட பீன்ஸ், கேரட் விலை திண்டுக்கல்லில் தற்போது அதிகரித்துள்ளன. பீன்ஸ் ஒரு கிலோ 24 ரூபாய்க்கும், கேரட் 18 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. நேற்றைய நிலவரப்படி விலை அதிகரித்து, பீன்ஸ் 40 ரூபாய்க் கும், கேரட் 28 ரூபாய்க்கும் விற்றது.திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டில் பிற காய்களின் விலை நிலவரம்: கத்தரி 24, தக்காளி 6, உருளைக்கிழங்கு 14, கோஸ் 8, பீட்ரூட் 20, முருங்கைக் காய் 30, அவரைக்காய் 28, சின்னவெங்காயம் 12, பெல்லாரி வெங்காயம் 16, குண்டு மாங்காய் 60, பட்டர் பீன்ஸ் 80, சோயாபீன்ஸ் 60, பாகற்காய் 20, முள்ளங்கி 10.

**சத்தி ஏலத்தில் கதளி விலை கசப்பு**

சத்தியமங்கலம்: சத்தியில் நடந்த வாழை ஏலத்தில் கதளி விலை குறைந்ததால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

சத்தி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை வாழைத்தார் ஏலம் நடக்கிறது. சத்தியமங்கலம், பவானிசாகர், டி.ஜி., புதூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் வாழைத்தார்களை விற்பனைக்கு கொண்டு வருவர். வழக்கத்தை காட்டிலும் நேற்று வாழைத்தார் வரவு

அதிகமாக இருந்தது. ஆனால், விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. வெள்ளிக்கிழமை இங்கு நடந்த ஏலத்தில் கதளி கிலோ 12 ரூபாய்க்கு விற்பனையானது. ஆனால், நேற்று அதே கதளி ரகம் கிலோ ஏழு ரூபாய்க்கு மட்டுமே விலை போனதால் விவசாயிகள் விரக்தியடைந்தனர். அதே சமயம் சென்ற வாரம் கிலோ எட்டு ரூபாய்க்கு விற்பனையான நேந்திரம் நேற்று கிலோ 12 ரூபாய்க்கு விற்பனையானது. "பொதுவாக இங்கு நடக்கும் ஏலத்தில் ஒவ்வொரு வாரமும் ஏதாவது ஒன்றிரண்டு ரகங்களுக்கு மட்டும் விலையை உயர்த்திவிட்டு, மற்ற ரகங்களுக்கு விலையை வியாபாரிகள் குறைத்துவிடுவது வாடிக்கையாகிவிட்டது," என்று விவசாயிகள் குமுறினர்.

**வான்கோழி வளர்ப்பில் விவசாயிகள்...ஆர்வம் குறைவு!: வணிகப்படுத்தலில் சிக்கல் நிலவல்**

கரூர்: இறைச்சிக்கு வளர்க்கப்படும் பறவையான வான்கோழிக்கு பெருமளவில் வரவேற்பு இருந்தாலும், வணிகப்படுத்தலில் உள்ள சிக்கல் காரணமாக, கரூர் மாவட்டத்தில் வான்கோழி வளர்ப்பு அதிகரிக்காமல் உள்ளது. விழிப்புணர்வு ஏற்படுத்த கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் திட்டமிட்டுள்ளது.

தென் அமெரிக்காவை தாயகமாகக் கொண்ட வான்கோழி, 15ம் நூற்றாண்டுக்கு பிறகு மற்ற நாடுகளிலும் வளர்க்க துவங்கி, தற்போது ஆஸ்திரேலியாவில் அதிகளவில் வளர்க்கப்படுகிறது. வான்கோழிகள் ஹாலந்து வெள்ளை, பார்பான் சிவப்பு, நார்கான்செட், பிரான்ஸ் பெல்ட் ஸ்வில்லி, ஸ்லேட், நார்போக் என பல வகைகள் உள்ளன. மற்ற கோழி இனங்களைவிட விரைவாக வளர்ச்சி பெறும் இந்த இனம், குறைந்த தீவனம் உட்கொண்டு குறைந்த நாளில் அதிக எடை கூடும் தன்மையுடையது. இறைச்சி மிருதுவாக, சுவைமிக்கதாக இருக்கும். ஒரு வான்கோழி மாதந்தோறும் சராசரியாக 12 முட்டை வரை இடும். இவற்றை வீட்டின் புறக்கடையிலும், பண்ணை முறையிலும் வளர்க்கலாம். அகன்ற மார்புடைய பிரான்ஸ், வெள்ளை மற்றும் பெல்ட்ஸ்வில்லி போன்ற இனங்கள் நமது பகுதிக்கு ஏற்ற வகையாக கருதப்படுகின்றன. ஆழ்கூள முறை, புறக்கடை வளர்ப்பு, மேய்ச்சலுடன் கொட்டகை வளர்ப்பு முறையில் வளர்க்கப்படுகிறது.

ஆழ்கூள முறையில் கொட்டகை காற்றோட்டமான இடத்தில் சிமென்ட் தரையுடன், காகிதம், மரத்தூள், நிலக்கடலை தோல், நெல் உமி போன்றவை தரை மீது ஆறு அங்குலம் உயரத்துக்கு பரப்பியிருக்க வேண்டும். ஆண் வான்கோழிக்கு ஐந்து சதுரடியும், பெண் கோழிக்கு நான்கு சதுர அடியும் இடவசதி தேவைப்படும். வளர்ந்த வான்கோழிக்கு தனி கொட்டகையும், குஞ்சு வளர்ப்பதற்கு தனி கொட்டகையும் அமைக்க வேண்டும். இம்முறையில் குறைந்தது 200 வான்கோழி கொண்ட பண்ணையாக இருந்தால் மிகுந்த லாபமுடையதாக அமையும். புறக்கடை வளர்ப்பு முறையில் பகல் வேளைகளில் வீட்டுப்புற தோட்டத்தில் அல்லது வயல்வெளிகளில் மேயவிட்டு பிற இரவு வேளைகளில் மட்டும் கொட்டகையில் அடைத்து வளர்க்கப்படும். தானியங்கள், சமையல் அறை கழிவுகள், எஞ்சிய உணவு போன்றவை உணவாக அமைகின்றன. தோட்டத்தில் உள்ள கீரை, பூச்சி, வண்டு, களைகளும் உணவாகிறது.
பொதுவாக வான்கோழி ஆறு முதல் ஏழு மாத வயதில் முட்டையிட துவங்குகின்றன. இதனுடைய அடைக்காலம் 28 நாட்கள். 'புரூடர்' எனப்படும் அடைக்காப்பானில் இளம் குஞ்சுகள் பொறித்திலிருந்து மூன்று வாரம் வரை செயற்கை வெப்பம் அளிக்கப்படுகிறது. வான்கோழி துரிதமாக வளர்வதால் குஞ்சு பொரித்த நாளிலிருந்து புரத சத்துடன் கூடிய தீவனம் அளிக்கப்படுகிறது. அடர்தீவன வகையாக மக்காச்சோளம், கம்பு, கடலை புண்ணாக்கு, சோ யா புண்ணாக்கு, மீன் தூள், கோ துமை மற்றும் அரிசி தவிடு மற்றும் தாது உப்பும் அளிக்கப்படுகிறது. விரைந்து வளர்ந்து கூடுதல் லாபம் அளிக்கக்கூடிய வான்கோழி வளர்ப்பை பொறுத்தவரை கரூரில் அதிக விழிப்புண ர்வு இல்லாத நிலையே உள்ளது.

கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் இணை பேராசிரியர் செந்தில்வேலன் கூறியதாவது: வான்கோழி அனைத்து சீதோஷண நிலையிலும் வளரும் இயல்புடையது. கரூரில் அதிகளவில் வளர்க்க வாய்ப்புள்ளது. ஆனால், விவசாயிகளிடையே போதிய விழிப்புணர்வு இல்லை. ஆண்டிப்பட்டிக்கோட்டையில் மட்டும் விரிவான ஒரு பண்ணை உள்ளது. சிறிய அளவிலான பண்ணைகள் 15 வரை உள்ளன. இங்கிருந்து கோவா, பெங்களூருக்கு இறைச்சி தேவைக்கு வான்கோழி அனுப்பப்படுகிறது.

இறைச்சியானது கிலோ ஒன்றுக்கு சராசரியாக 300 ரூபாய் விலை கிடைக்கிறது. உள்ளூரில் கிறிஸ்துமஸ், பொங்கல் உள்ளிட்ட விழாக்காலத்தில் மட்டும் பிரியாணி உள்ளிட்டவை செய்ய வான்கோழி கொள்முதல் அதிகம் காணப்படுகிறது. மற்ற காலங்களில் இவை கண்டுகொள்ளப்படாமல் உள்ளது. இதனால், உள்ளூர் மார்க்கெட்டில் வணிகப்படுத்தலில் சிக்கல் ஏற்படுகிறது. வரும் ஏப்ரலில் வான்கோழி மற்றும் காடை வளர்ப்பு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**உதவி இயக்குனர் தகவல் விவசாயிகளுக்கு மானிய விலையில் ஜிப்சம்**

பள்ளிபாளையம்: 'ஒரு ஹெக்டேருக்கு 400 கிலோ ஜிப்சம் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது' என, பள்ளிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நிலக்கடலை பயிரின் காய்கள் அதிக எடையுடையதாகவும், பருப்புகள் திரட்சியாகவும் கிடைத்திட அடியுரமாகவும், மேலுரமாகவும் ஜிப்சம் இடவேண்டும். நிலக்கடலையின் எண்ணெய் சத்து அதிகரிக்கவும் ஜிப்சம் உதவுகிறது. ஜிப்சத்தில் சுண்ணாம்பு சத்து 24 சதவீதமும், கந்தக சத்து 18 சதவீதமும் உள்ளது.

ஜிப்சத்தை அடியுரமாக ஹெக்டேருக்கு 200 கிலோ இடவேண்டும். மேலும், 2ம் களை எடுக்கும் தருணத்தில், 40 முதல் 45 நாட்களில் ஹெக்டேருக்கு 200 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். செடிகளை சுற்றி விழுது இறங்கும் இடத்தில் ஜிப்சம் இட்டு மண் அணைப்பது சிறந்தது. நிலத்தில் போதிய ஈரம் இருக்கும் போது மட்டுமே ஜிப்சம் இடுவது பயன்தரும். பள்ளிபாளையம் வட்டாரத்தில் உள்ள வேளாண் விரிவாக்க மையம், வெப்படை மற்றும் குமாரபாளையம் துணை வேளாண் விரிவாக்க மையங்களில் ஜிப்சம் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேருக்கு 400 கிலோ ஜிப்சம் மானிய விலையில் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக வழங்கப்படும். ஜிப்சம் தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்களை அணுகி பெறலாம் அல்லது சம்பந்தப்பட்ட வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**டி.ஏ.பி., பயறு வகை நுண்ணுரங்களை பெற விவசாயிகளுக்கு வேளாண் துறை அழைப்பு**

திருவையாறு : திருவையாறு பகுதியில் உளுந்து மற்றும் பயறு வகை சாகுபடியில் அதிக மகசூல் பெற நுண்ணுயிர் மற்றும் டி.ஏ.பி. உரங்களை மானிய விலையில் பெற்று பயனடையுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.திருவையாறு வட்டாரத் தில் 3 ஆயிரத்து 70 ஏக்கரில் 28 எக்டேரில் உளுந்தும், 633 ஏக்கரில் பச்சைப் பயறு சாகுபடியும் செய்யப்பட்டு உள்ளது. இதில் நெல் தரிசு நிலத்தில் உளுந்து பயிர் சாகுபடி செய்யப்படுவதால் அடிஉரம் இடுவதற்கு வாய்ப்பில்லாமல் இருப்பதால், மகசூல் குறையும் வாய்ப்பு உள்ளது. இதை நிவர்த்தி செய்ய இலைவழி உரமாக 2 சதவீதம் டி.ஏ.பி. கரைசல் மற்றும் 0.5 சதவீதம் பயறு வகை நுண்சத்து தெளிப்பு மேற்கொள்ள வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.1 லட்சமும், ஐசோபாம் பயிர் வகை திட்டத்தின் கீழ் ரூ.15 ஆயிரமும் மான்யம் ஒதுக்கீடு

பெறப்பட்டு உள்ளது.

இந்த டி.ஏ.பி. மற்றும் பயிர் வகை நுண்ணுரங்கள் திருவையாறு, மேலத்திருப்பந்துருத்தி, மன்னார் சமுத்திரம் மற்றும் மரூர் வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக் கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அங்கு இந்த உரங்களை விவசாயிகள் பெற்று பயனடையலாம். மேலும், 1 எக்டேருக்கு 2 முறை தெளிக்க 25 கிலோ டி.ஏ.பி. வழங்கப்பட்டு ரூ.200 மான்யம் அளிக்கப்படுகிறது.

பயறு வகை நுண்சத்து 1 எக்டேருக்கு 2 முறை தெளிக்க 2.5 கிலோ வீதம் முழுவதும் இலவசமாக வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் உதவி அலுவலரை அணுகி முன் பதிவு செய்து பரிந்துரை சீட்டு பெற்று பயன் பெறலாம் என்று தெரிவித்துள்ளார்.

**கப்பை கிழங்கு சாகுபடியில் ஆர்வம் காட்டும் தேவாரம் விவசாயிகள்**

தேவாரம்: தேவாரம் பகுதியில் விவசாய கூலியாட்கள் பற்றாக்குறை காரணமாக கப்பை கிழங்கு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். முழுக்க விவசாயம் சார்ந்த பகுதியாக தேவாரம் உள்ளது. இறவை பாசன முறையில் இரண்டாயிரம் ஏக்கருக்கு மேல் சாகுபடி நடக்கிறது. காய்கறி, தானிய பயிர்கள், நெல், வாழை, கரும்பு உள்ளிட்டவை பயிரிடப்படுகின்றன. இதற்கு விவசாய கூலியாட்கள் அதிகளவில் தேவைப் படுகின்றனர். பாத்தி கட்டுவது, விதைப்பு, களையெடுப்பு, அறுவடை சீசனில் கூலியாட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் கப்பை கிழங்கு சாகுபடியில் ஈடு படுகின்றனர்.விதை கரணை நடவு, களையெடுப்பு நேரத்தில் மட்டும் கூலியாட்கள் தேவை படுகின்றனர்.

பத்து மாத விவசாயம் என்பதாலும், கப்பைக்கு நல்ல விலை கிடைப்பதாலும் விவசாயிகள் கப்பை பயிரிடுவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.விவசாயிகள் கூறுகையில், அரசு நூறு நாள் வேலை வாய்ப்பு திட்டம் மற்றும் கேரளாவில் அதிக சம்பளத்திற்கு ஆட்கள் வேலைக்கு செல்கின்றனர். கேரளா எஸ்டேட் வேலைக்கு செல்பவர்களுக்கே இருப்பிடத்திற்கே வந்து ஜீப்பில் அழைத்து செல்கின்றனர். வேலை முடிந்ததும் வீட்டில் கொண்டு வந்து விடுவதால் பெரும்பாலான விவசாய கூலிகள் அங்கு சென்று விடுகின்றனர். இதனால் வேலையாட்கள் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதை சமாளிக்க கப்பை கிழங்கு சாகுபடி சிறந்ததாக உள்ளது என்றனர்.

**கோடை வாசஸ்தலமான மூணாறில் வெப்பம் அதிகரிப்பு கோடை மழை பொய்த்ததால் தேயிலை விவசாயம் பாதிப்பு**

மூணாறு: கேரளாவில் கோடை காலம் தொடங்குவதற்கு முன்பே வெப்பம் வாட்டி வதைக்கிறது. பாலகாட்டில் நிலவிய வெப்பத்தால் உடலில் காயங்கள் ஏற்பட்டு 15 பேர் பல்வேறு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கேரளாவில் கோடை காலம் தொடங்குவதற்கு முன்பே கடும் வெப்பம் நிலவி வருகிறது. மாநிலத்தில் கடந்த ஆண்டுகளை விட தற்போது பகலில் வெப்பம் 4 டிகிரி செல்சியஸ் அதிகரித்துள்ளதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.மாநிலத்தில் அதிகபட்சமாக பாலக்காட்டில் பகலில் வெப்பம் 41.5 டிகிரி செல்சியஸ்சாக இருந்தது. தொடர்ந்து அதிகரித்து வரும் வெப்பத்தால் பாலக்காட்டில், தீக்காயங்கள் போன்ற காயங்கள் ஏற்பட்டு இதுவரையிலும் 15 பேர் பாதிக்கப் பட்டு பல்வேறு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாநிலத்தில் முக்கிய நகரங்களில் பகலில் சில தினங்களாக நிலவி வரும் வெப்பம் (செல்சியஸ்சில்) திருவனந்தபுரம் 33,

கொச்சி, ஆலப் புழா 34, கண்ணூர், கோழிக் கோடு 35, திருவல்லா 36, கோட்டயம், கொல்லம் 37, புனலூர், திருச் சூர் 39 டிகிரி செல்சியஸ்சாக காணப் பட் டது.

இரவில் அதிகபட்ச வெப்பமாக கோழிக்கோட்டில் 27 டிகிரி செல்சியஸ்சாக இருந்தது.மாநிலத்தில் மலை சூழ்ந்து மாவட்டமான இடுக்கி மாவட்டத் தில் கடந்த ஆண்டுகளை விட தற்போது வெப்பம் அதிகரித்து காணப்படுகிறது. குறிப்பாக மாலையில் குளு குளு என காணப்படும் சுற்றுலா பகுதியான மூணாறில் வெப்பம் அதிகரித்துள்ளது. பகலில் வெப்பம் 32 டிகிரி செல்சியஸ்சை எட்டியது. இப்பகுதியில் ஆண்டுதோறும் பிப்ரவரி, மார்ச் ல் கோடை மழை பெய் வது வழக்கம். இந்த மழை தேயிலை விவசாயத்துக்கு ஏற்றதாக அமையும். ஆனால் இந்தாண்டு இதுவரையிலும் கோடைமழை பெய்யவில்லை. ஆகவே மழையை வேண்டி தோட்ட தொழிலாளர்கள் தேயிலைத் தோட்டங்களில் பொங்கல் வைத்து வருணபகவானை வணங்கி வருகின்றனர்.

**இலத்தூர் லட்சுமி அரிகர பள்ளியில் பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம்**

தென்காசி: இலத்தூர் லட்சுமி அரிகர உயர்நிலைப் பள்ளியில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம் நடந்தது.செங்கோட்டை வட்டாரம் இலத்தூர் லட்சுமி அரிகர உயர்நிலைப் பள்ளி எஸ்.எஸ்.எல்.சி.மாணவர்களுக்கு மக்ரோ மேனேஜ்மெண்ட் மோட் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம் நடந்தது.
வேளாண்மை இணை இயக்குநர் சுப்பிரமணியன் தலைமை வகித்து பேசும் போது, நன்மை பூச்சிகள், தீமை பூச்சிகள் வாழ்விடங்கள், விஷ மருந்துகள் தெளிப்பதால் நன்மை செய்யும் பூச்சிகள் அழிந்து தீமை செய்யும் பூச்சிகள் பெருகி விடுதல் பற்றி விளக்கினார். மேலும் அவர் நன்மை செய்யும் பூச்சிகளை காத்திடவும், சுற்றுச்சூழலை காத்திடவும், விஷ மருந்துகளான டெஸிஸ், சிம்புஷ் மருந்துகளை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.
துணை வேளாண்மை இயக்குநர் தேவசகாயம் பேசும் போது, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பின் முக்கிய நோக்கம் பற்றி விளக்கினார். மேலும் நலமான சூழலில் வளமான பயிரை வளர்த்திட வேண்டும். மருந்துகளை மட்டும் நம்பி பூச்சி நோய்களை கட்டுப்படுத்த கூடாது. உழவியல் கைவினை உயிரியல், ரசாயன முறைகளை கடைபிடித்து பூச்சிகளை முழுமையாக கட்டுப்படுத்த வேண்டும் என்றார்.

வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் பேசும் போது, கோடை உழவு செய்திட வேண்டும். வயல் வரப்புகளை சுத்தமாக வைத்திட வேண்டும். எதிர்ப்பு சக்தி ரகங்களை பயன்படுத்த வேண்டும். ஒரே நேரத்தில் விதைக்க வேண்டும். விளக்கு பொறி வைத்து தாய் பூச்சிகளை அழிக்க வேண்டும். இனக்கவர்ச்சி பொறி வைத்து ஆண் பூச்சிகளை கவர்ந்து அழிக்க வேண்டும் என்றார்.

துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன் பேசும் போது, வேம்பு சார்ந்த மருந்துகளான வேம்பங்கொட்டை சாறு, நிமின், நிம்பிசிடின் பயன்படுத்துவது பற்றியும், வைரஸ் கரைசல், டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணி பயன்படுத்துவதன் நோக்கம் பற்றியும் விளக்கினார். பள்ளி தலைமையாசிரியை தெரஸ் இந்த கருத்துக்கள் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றார்.நன்மை, தீமை பூச்சிகள், இயற்கை உரங்கள் பற்றிய கருத்து காட்சி அமைக்கப்பட்டிருந்தது. நெல் விதையுடன் சூடோமோனாஸ் விதை நேர்த்தி செய்வது பற்றி செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது. மாணவர்கள் வயல் வெளிகளுக்கு அழைத்து செல்லப்பட்டு நன்மை, தீமை பூச்சிகளை நேரடியாக

கண்டறிய செய்யப்பட்டது. மாணவி கிருஷ்ணவேணி பயிற்சி பயனுள்ளதாக இருந்தது என்றார்.உதவி வேளாண்மை அலுவலர் முனீஸ்வரன் நன்றி கூறினார்.

**மரக்கன்று நடும் விழா**

திருவண்ணாமலை:தி.மலை அருகே கனந் தம்பூண்டியில் மரக்கன்று நடும் விழா நடந்தது.புவி வெப்பமயமாதலை தடுக்கும் வகையில், தீபம் இளைஞர் நற்பணி மன்றம் சார்பில் நடந்த நிகழ்ச்சிக்கு, பஞ்., தலைவர் மனோகரன் தலைமை வகித்தார். தொழிலதிபர் கார்த்திகேயன் மரக் கன்றுகளை நடும் பணியை தொடங்கி வைத்தார்.தீபம் இளைஞர் நற்பணி மன்ற தலைவர் சிவா, வக்கீல் முரளி, பிரபுசந்திரமோகன், பழனி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**.பாசன வடிகால்களை தூர்வார விவசாய சங்க மாநாட்டில் தீர்மானம்**

முத்துப்பேட்டை : முத்துப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள அனைத்து பாசன வடிகால்களையும் தூர்வாரித்தர வலியுறுத்தி விவசாய சங்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முத்துப்பேட்டை அருகே இடும்பாவனம் பகுதியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க சிறப்பு மாநாடு நடந்தது. ஒன்றிய தலைவர் சிவசாமி தலைமை வகித்தார். நிர்வாகக்குழு உறுப்பினர் சுப்பிரமணியன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் உலகநாதன், சந்திரசேகர ஆசாத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய செயலாளர் நீலமேகம் ஆண்டறிக்கை வாசித்தார். எம்.எல்.ஏ., உலகநாதன், விவசாய சங்க மாவட்ட துணைத்தலைவர் சிவஞானம், ஒன்றிய செயலாளர் முருகையன், துணைச் செயலாளர் ராமநாதன் ஆகியோர் பேசினர். இதில் முத்துப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள அனைத்து பாசன வடிகால் வாய்க்கால்களையும் தூர்வாரித்தர வேண்டும். அரசு வழங்கிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் நிலுவையில் உள்ள 10 சதவீத பாக்கித்தொகையை உடன் வழங்க வேண்டும். விவசாயத்துக்கான நீர்ஆதாரம் பெற்றுத்தரும் பழம்பாண்டியாறு, புதுப்பாண்டியாறு, மரைக்காகோரையாறு, கிளை தாங்கியாறு, கந்தபரிச்சானாறு ஆகியவற்றின் கரைகளை உயர்த்தி தரவேண்டும். நடப்பாண்டு குறுவை மற்றும் சம்பா சாகுபடிக்கு வரும் ஜுன் 12ம் தேதி தண்ணீர் திறந்து விடவேண்டும். விவசாயத்துக்கான பயிர்க்கடனை தாமதமின்றி வழங்க வேண்டும். தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேங்காய் கொப்பரை இறக்குமதியை ரத்து செய்ய வேண்டும் என்பன போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாதர் சங்க தலைவர் கயல்விழி, பேரூராட்சி உறுப்பினர் நிர்மலா, இளைஞர் மன்ற செயலாளர் உமேஷ்பாபு, மாநாட்டு வரவேற்பு குழு தலைவர் ராமகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஒன்றிய பொருளாளர் ராஜரவிச்சந்திரன் வரவேற்றார்.

**விவசாயிகள் சங்க நிர்வாகிகள் தேர்வு**

முத்துப்பேட்டை: தமிழ்நாடு விவசாயிகள் சங்க முத்துப்பேட்டை ஒன்றிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தலைவராக சிவசாமி, துணைத் தலைவர்களாக மணியன், சுப்பிரமணியன், செயலாளராக நீலமேகம், துணைச் செயலாளர்களாக பரமானந்தம், மாரிமுத்து, பொருளாளராக ராஜரவிச்சந்திரன் ஆகியோரும், செயற்குழு உறுப்பினர்களாக 21 பேரும், நிர்வாகக்குழு உறுப்பினர்களாக 55 பேரும் அறிவிக்கப்பட்டுள்ளனர். இத்தகவலை ஒன்றிய துணைச் செயலாளர் ராமநாதன் தெரிவித்துள்ளார்.

**சீர்காழியில் விவசாய கருத்தரங்கு**

சீர்காழி: சீர்காழியில் விவசாய கருத்தரங்கு நடந்தது. விவசாயிகள் விடுதலை முன்னணி மாவட்ட அமைப்பாளர் அம்பிகாவதி தலைமை வகித்தார். விவசாயிகள் சங்கத்தலைவர் இமயவரம்பன், காவிரி டெல்டா மாவட்ட விவசாய சங்கங்களின் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ஆறுபாதி கல்யாணம், விழுப்புரம் மாவட்ட அமைப்பாளர் அம்பேத்கர், மாநில இணைச் செயலாளர் காளியப்பன் ஆகியோர் பேசினர். இதில் கரும்பு டன்னுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாயும், நெல் குவிண்டாலுக்கு ஆயிரத்து 500 ரூபாயும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். கரும்பை பருவ காலத்திற்குள் வெட்டி ஏற்ற ஏற்பாடுகள் செய்ய வேண்டும். நீட்டிக்கும் காலத்திற்குரிய நஷ்டஈடு வழங்க வேண்டும். விவசாயத்தையும், மீன் பிடித்தொழிலையும் தேசிய தொழிலாக அறிவித்து முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. விவசாயிகள் விடுதலை முன்னணி பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர். வட்ட செயலாளர் ரவி நன்றி கூறினார்.

**விவசாயிகள் பயிற்சி முகாம்**

குடியாத்தம்:முக்குன்றம் தொடக்கப்பள்ளியில் குடியாத்தம் வட்டார விதைக்கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான 3 நாள் பயிற்சி முகாம் நடந்தது.வேளாண்மை உதவி இயக்குனர் சித்தகங்கைய்யா தலைமை வகித்தார்.

வட்டார வேளாண்மை அலுவலர் சுஜாதா, செம்மை நெல் சாகுபடி, பயறுவகைகளில் விதைப்பெருக்க வழிமுறைகள் மற்றும் எண்ணை வித்து பயிர்களில் அதிக மகசூல் எடுக்க கடைப்பிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து செயல்விளக்கம் அளித்தார். நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு கையேடுகள், இடுபொருட்கள் வழங்கப்பட்டது.

**காளான், வாழை நார் உற்பத்தி பயிற்சி முகாம்**

வேலூர்:திருப்பத்தூர் அடுத்த ஜவ் வாது மலையில் காளான் மற்றும் வாழை நார் உற்பத்தி பயிற்சி முகாம் நடந்தது.ஜவ்வாது மலையில் உள்ள மொழலை, வலசை, அரும்பல்பட்டு, புதூர்நாடு, சின்ன வட்டானூர் கிராமங்களில் நபார்டு ஆதரவு பெற்ற உழவர் மன்றங்கள் சார்பில் காளான் மற்றும் வாழை நார் உற்பத்தி பயிற்சி முகாம் நடந்தது.

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி சமூக முன் னேற்ற பேரவை இயக்குனர் ஆண்டரூஸ் ராஜா தலைமை வகித்தார். வேலூர் இயற்கை வேளாண்மை இயக்க ஆலோசகர் புருஷோத்தமன், ஜவ்வாது மலை கிராமங்களில் வெப்ப நிலை குறைந்து இருப்பதால் இயற்கை காளான்களை லாபகரமாக உற்பத்தி செய்வது எப்படி? என்பது குறித்து பேசினார்.காளான் உற்பத்தி மற்றும் வாழை நார் உற்பத்தி செய்முறைகள் குறித்து ஒருங்கிணைப்பாளர் அருள்தாஸ் செய்து காட்டினார்.உழவர் மன்ற நிர்வாகிகள் ஏகாம்பரம், காசிலிங்கம், வள்ளி, சென்னம்மாள், அண் ணாமலை, ஆண்டி, வலசைதுக்கன், அனுமன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மாவட்டத்தில் வேர்கடலை சாகுபடி தொடர் சரிவு : மாற்றுப் பயிரில் விவசாயிகள் ஆர்வம்**

தியாகதுருகம்: விழுப்புரம் மாவட்டத்தில் வேர்கடலை சாகுபடி படிப்படியாக வீழ்ச்சி அடைந்து வருகிறது. தகுந்த சூழல் இருந்தும் வேர்கடலை சாகுபடியை மாவட்ட விவசாயிகள் புறக்கணித்ததால் சமையல் எண் ணெய் விலை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் வேர்கடலை அதிகம் சாகுபடி செய்யப்படும் பகுதியாக செஞ்சி, திண்டிவனம், கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர் கண்டறியப் பட்டுள்ளன. இதில் திண்டிவனம் பகுதியில் மட்டும் வேர்கடலை உற்பத்தி அதிகரித்துள்ளது. மாவட்டத்தின் மொத்த உற்பத்தி வெகுவாக குறைந்து வருகிறது. கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் கடந்த 2008-09 ஆண் டில் 992 டன் வேர்கடலை 3.47 கோடி ரூபாய்க்கு விற்பனை ஆனது. ஆனால், 2009-10 ஆண் டில் 328 டன் வேர்கடலை 1.17 கோடி ரூபாய் அளவாக குறைந் துள்ளது. இதன்மூலம் வேர்கடலை சாகுபடி செய்வது கள்ளக் குறிச்சி பகுதியில் மூன்றுமடங்கு சரிந்துள்ளது.ஆனால் இப்பகுதியில் கடந்த ஆண்டில் 360 டன்னாக இருந்த உளுந்து விற்பனை இவ்வாண்டு 1004 டன்னாக உயர்ந்துள்ளது. மானா வாரியில் வேர்கடலை பயிரிட்ட பெரும்பாலான விவசாயிகள் அதனை தவிர்த்து உளுந்து சாகுபடிக்கு மாறியது தெரிய வருகிறது. இதேபோல், திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டியில் 2008-09 ஆண்டில் 5,826 டன் வேர்கடலை 18.5 கோடி ரூபாய்க்கு விற்பனையானது. அதுவே, 2009- 10 ஆண்டில் 2,510 டன் வேர்கடலை 8.3 கோடிரூபாய் அளவுக்கு குறைந்துள்ளது. செஞ்சி மார்க்கெட் கமிட்டியில் 2008-09 ஆண்டில் 84 ஆயிரத்து 20 டன் வேர்கடலை 116.6 கோடி ரூபாய்க்கு விற்பனையானது. ஆனால், 2009- 10 ஆண்டில் 78 ஆயிரத்து 740 டன் வேர்கடலை 103 கோடிரூபாய் அளவாக குறைந்துள்ளது.

கடந்த இரு ஆண்டுகளில் கள்ளக்குறிச்சியில், திருக்கோவிலூர், செஞ்சி பகுதிகளில் வேர்கடலை உற்பத்தி சரிந்து வருகிறது. ஆனால் திண்டிவனம் பகுதிகளில் வேர்கடலை உற்பத்தி கடந்த ஆண்டைவிட இவ் வாண்டு அதிகரித்துள்ளது. திண்டிவனம் மார்க்கெட் கமிட் டியில் 2008-09 ஆண்டில் 4,783 டன் வேர்கடலை 15.7 கோடி ரூபாய்க்கு விற்பனையானது. ஆனால் 2009- 10 ஆண்டில் 7,065 டன் வேர்கடலை 26.2 கோடிரூபாய் அள வுக்கு உயர்ந்துள்ளது.இருப்பினும் இம்மூன்று மார்க் கெட் கமிட்டிகளின் சராசரி கணக் கீட்டின்படி கடந்த 2008-09 ஆண் டில் 95 ஆயிரத்து 621 டன் அள வுக்கு விற்பனையான வேர்கடலை 2009-10 ஆண்டில் 88ஆயிரத்து 643 டன்னாக குறைந்துள் ளது. கடந்த ஆண்டை ஒப்பிடும் போது 6,978 டன் வேர்கடலை உற்பத்தி குறைந்துள்ளது. இதில் கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர் பகுதிகளில் வேர்கடலை சாகுபடியை பெரும்பாலான விவசாயிகள் புறக்கணித்துவருவது தெளிவாகியுள்ளது. வரும் ஆண்டுகளில் வேர்கடலை உற்பத்தி மேலும் சரியும் என்றே கருதப்படுகிறது. வேர்கடலைக்கு மாற்றாக சமையல் எண்ணெய் உற்பத் தியை பெருக்கும் நோக்கில், எண் ணெய் பனை சாகுபடியில் விவசாயிகளை ஈடுபடுத்தும் முயற்சியில் வேளாண்துறையினர் ஈடுபட்டுள்ளனர். தற்போது விழுப்புரம் மாவட்டத்தில் 2,500 ஏக்கர் பரப்பில் எண்ணெய் பனை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதற் காக இரண்டரை ஏக்கருக்கு 11 ஆயிரத்து 290 ரூபாய் வேளாண் துறை மூலம் மானியம் அளிக்கப் படுகிறது. இருப்பினும், எண்ணெய் வித்துக்களில் முக்கிய இடத்தில் உள்ள வேர்கடலை மூலம் எடுக் கப்பட்ட விளைச்சலை, எண் ணெய் பனையால் உடனடியாக ஈடுகட்ட முடியவில்லை. குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு பின்னரே எண்ணெய் பனை வளர்ந்து மகசூல் தரும் என்பதே இதற்கு முக்கிய காரணமாகும்.

தகுந்த சூழல் இருந்தும் வேர்கடலை சாகுபடியை விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் புறக்கணித்ததால் உற்பத்தி குறைந்து தமிழகத்தின் மொத்த வேர்கடலை உற்பத்தியில் சரிவு ஏற்பட் டுள்ளது. இதனால் வெளிநாட் டில் இருந்து சமையல் எண்ணெய் கூடுதலாக இறக்குமதி செய்யவேண்டிய நிலை உருவாகிறது. இதற்கு தீர்வாக விவசாயிகளை வேர்கடலை சாகுபடியில் மீண் டும் ஈடுபடுத்திட விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை வேளாண்துறை அதிகாரிகள்

மேற் கொள்ளவேண்டும். விதைப்பு எந்திரங்கள், உரம் உள்ளிட்டவைகளை சலுகை விலையில் அளித்து ஊக்கப்படுத்த வேண்டும்.

**நீர் வரத்து வாய்க்காலை சீரமைக்க ஏரி பாசன சங்கத்தினர் கோரிக்கை**

கள்ளக்குறிச்சி: ஏரி நீர் வரத்து வாய்க் காலை சீரமைக்க வேண் டும் என ஏரி பாசன சங்கத் தினர் தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர்.கள்ளக்குறிச்சி அடுத்த தென்கீரனூரில் நடந்த ஏரி பாசன சங்கத்தின் அவசர கூட்டத்திற்கு தலைவர் கருணாகரன் தலைமை தாங்கினார். ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள் சக்திவேல், பூமாலை, தெய்வீகன், குழந்தைவேல், பச் சையம்மாள் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் கோமுகி ஆற்றிலிருந்து ஏரிக்கு செல் லும் சிறு தடுப்பணை மற் றும் மணல் போக்கியை சரி செய்து, ஷெட்டர் அமைக்க வேண்டும், நீர் வரத்து வாய்க்காலை சுத் தம் செய்து, ஆழப்படுத்த வேண்டும், பச்சையம்மன் கோவில் அருகே சேதமான உடைப்பை சீர்படுத்தி கருங்கல் கட்டடம் கட்ட வேண்டும் உள் ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்களின் நகலை பொதுப்பணித் துறையினருக்கு அனுப்பி வைத்துள் ளனர்.

**சங்கராபுரம் பகுதியில் புளி மகசூல் அமோகம்**

சங்கராபுரம்: சங்கராபுரம் பகுதியில் இந்தாண்டு புளி அமோக மாக விளைந்துள்ளது. சங்கராபுரம் கள்ளக் குறிச்சி சாலையில் சாலை ஓரத்தில் புளிய மரங்கள் அதிகளவில் உள்ளன. இந்த மரங்க ளில் இந்தாண்டு புளி அதிகளவில் காய்த்துள் ளது. இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் தற்போது மரத்திலிருந்து புளியை சேகரித்து வருகின்றனர். கடந்த 4, 5 ஆண்டுகளை விட இந்தாண்டு புளி அதி களவில் விளைந்துள் ளது. இருந்தாலும் புளி கிலோ 40 ருபாய்க்கு விற் கப்படுகிறது. புது புளி மார்க்கெட்டுக்கு வந் ததும் விலை குறையும் என எதிர்பார்க்கப்ப டுகிறது.

**பால் உற்பத்தி 20 சதவீதம் சரிந்தது**

பல்லடம்: பசுந்தீவனங்கள் விளைச்சல் பாதிப்பு, வெயில் தாக்கம் காரணமாக பல்லடம் பகுதியில் பால் உற்பத்தி 20 சதவீதம் சரிந்தது.

பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரத்தில் 8,000க்கும் மேற்பட்ட கலப்பின உயர் ரக கறவை மாடுகள் வளர்க்கப்பட்டு, பால் உற்பத்தி நடந்து வருகிறது. சிந்து, ஜெர்ஸி இன ரக மாடுகள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. குறைந்த அளவு பால் தரும் நாட்டு ரக கறவை மாடுகள் 1,000க்கும் குறைவாகவே உள்ளன. பல்லடம் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பால்கள் தனியார் கொள்முதல் நிலையம், ஆவின் கொள்முதல் நிலையம், ஓட்டல் மற்றும் வீடுகளுக்கு விவசாயிகளால் விற்கப்படுகிறது.தனியார் நிறுவனங்கள் கொள்முதல் செய்யும் பாலை, பாக்கெட்களில் அடைத்து, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், கேரளாவுக்கும் அனுப்புகின்றன. இரண்டு வாரங்களாக, பல்லடம் பகுதியில் அடிக்கும் கடும் வெயில் காரணமாக பசுந்தீவனங்கள் உற்பத்தி குறைந்து விட்டது. கறவை மாடுகளுக்கு பசுந்தீவனங்கள் போதிய அளவு கிடைக்காமை; கடும் வெயில் தாக்கம் காரணமாக, பல்லடம் பகுதியில் பால் உற்பத்தி வழக்கத்தை விட, 20 சதவீதம் சில நாட்களாக சரிந்துள்ளன. இரண்டு வாரத்திற்கு முன் தினமும் 10 லிட்டர் பால் கொடுத்த கறவை மாடுகள், எட்டு லிட்டர் மட்டுமே பால் கொடுக்கின்றன.தற்போது, பால் லிட்டருக்கு 14 முதல் 15 ரூபாய் வரை மட்டுமே கொள்முதல் விலை கிடைத்து வரும் நிலையில், ஒவ்வொரு மாட்டுக்கும் சராசரியாக இரண்டு முதல் மூன்று லிட்டர் வரை பால் உற்பத்தி குறைவு இத்தொழிலை முழுமையாக நம்பியுள்ள விவசாயிகளை வேதனை அடையச் செய்துள்ளது.கறவை மாடுகளுக்கு

வழங்கப்படும் பருத்திக்கொட்டை, புண்ணாக்கு, தவிடு விலை கணிசமாக உயர்ந்துள்ளது. பால் உற்பத்தி குறைவு, மாட்டுத்தீவனங்கள் விலை உயர்வு காரணமாக சொந்தமாக தீவனம் வளர்க்க, விவசாய பூமிகள் இல்லாத விவசாயிகள், கறவை மாடு வளர்ப்புத் தொழிலில் போதிய வருவாயின்றி அவதி அடையும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

சித்தம்பலம் விவசாயி மணி கூறியதாவது:பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் கடந்த இரண்டு வாரங்களாக அடித்து வரும் கடும் வெயில் காரணமாக பசுந்தீவனங்கள் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. பால் உற்பத்தி, கடந்த ஒரு மாதத்தை ஒப்பிடுகையில் 20 சதவீதம் குறைந்துள்ளது. பல்லடம் பகுதியில் தற்போது மேய்ச்சல் நிலங்கள் பெருமளவு வீட்டுமனைகளாக மாறிவருவதால், வருங்காலங்களில் பசுந்தீவனம் விளைச்சல் அரிதாகி விடும். தற்போது தினமும் 10 லிட்டர் பால் கொடுக்கும் கறவை மாடுகளுக்கு தீவனச்செலவு 70 முதல் 80 ரூபாய் வரை ஏற்படுகிறது.
பருத்திக்கொட்டை கிலோ 11 ரூபாயாகவும், புண்ணாக்கு 15 ரூபாயாக உள்ளதால், பால் உற்பத்தியில் எதிர்பார்க்கும் அளவு லாபம் கிடைப்பதில்லை. பால் கொள்முதல் விலையை அரசு உயர்த்தினால் மட்டுமே பால் உற்பத்தியாளர்கள் பயனடைய முடியும், என்றார்.

*உலக அளவில் தேவைப்பாடு உயர்ந்து வருவதால் நாட்டின் பருத்தி ஏற்றுமதி 163 சதவீதம் அதிகரிக்கும்*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*உலக அளவில் பருத்திக்கான தேவைப்பாடு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனையடுத்து, நடப்பு 2009–10 பருத்தி பருவத்தில் ஏற்றுமதி, சென்ற பருவத்தைக் காட்டிலும் 163 சதவீதம் அதிகரிக்கும் என அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது. பருத்தி பருவம் என்பது அக்டோபர் மாதம் தொடங்கி, செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைகிறது.*

*உற்பத்தி*

*இந்தியா பருத்தி உற்பத்தியில், உலக அளவில் இரண்டாவது மிகப் பெரிய நாடாகத் திகழ்கிறது. சென்ற 2008–09–ஆம் ஆண்டு பருத்தி பருவத்தில், இந்தியாவிலிருந்து 23.60 லட்சம் பருத்தி பொதிகள் ஏற்றுமதி ஆகியுள்ளன (ஒரு பொதி என்பது 170 கிலோ ஆகும்).அப்போது கடும் நிதி நெருக்கடி ஏற்பட்டு, உலக அளவில் பொருளாதாரத்தில் கடும் பின்னடைவு ஏற்பட்டிருந்தது. தற்போது, உலக நாடுகள் பின்னடைவிலிருந்து மீண்டு வருகின்றன. எனவே, ஜவுளி வகைகள் மற்றும் ஆயத்த ஆடைகள் விற்பனை அதிகரித்து வருகிறது. இதனையடுத்து, உலக அளவில் பருத்தி பயன்பாடு சிறப்பாக வளர்ச்சி கண்டு வருகிறது.*

*அதேசமயம், பருத்தியை அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் அமெரிக்காவில் இதன் கையிருப்பு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையுடன் ஒப்பிடும்போது 70 சதவீதம் சரிவடைந்து 32 லட்சம் பொதிகளாக குறைந்துள்ளது. இது, இந்திய பருத்தி ஏற்றுமதி நிறுவனங்களுக்கு சிறந்த வாய்ப்பை உருவாக்கி உள்ளது. இதனையடுத்து, நடப்பு பருவத்தில், நாட்டின் பருத்தி ஏற்றுமதி, சென்ற பருவத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கிற்கு மேல் அதிகரித்து 62 லட்சம் பொதிகளாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், பருத்தி ஏற்றுமதி வாயிலான அன்னியச் செலாவணி வருவாய் அதிகரிக்கும்.*

*சீனா*

*இந்திய நிறுவனங்கள், சீனா, துருக்கி மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகளுக்கு அதிக அளவில் பருத்தியை ஏற்றுமதி செய்து வருகின்றன. இந்நிலையில், நடப்பு பருவத்தில் இந்நாடுகள் ஒட்டுமொத்தத்தில், சென்ற பருவத்தைக் காட்டிலும் 33 சதவீதம் அதிகமாக, அதாவது 1.45 கோடி பொதிகள் பருத்தியை இறக்குமதி செய்யும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

*பருத்தி உற்பத்தியில், உலக அளவில் சீனா முதலிடத்தில் உள்ளது. சென்ற பிப்ரவரி மாதத்தில் சீனாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகிய இரண்டும் 40 சதவீதத்திற்கு மேல் அதிகரித்துள்ளது. இது, அந்நாட்டின் தொழில் துறை நடவடிக்கைகளில் ஏற்பட்டு வரும் விறுவிறுப்பை எடுத்துக்காட்டுகிறது. பொருளாதார வளர்ச்சி வேகத்தில், சர்வதேச அளவில் சீனாவே முதலிடத்தில் உள்ளது. இந்நாடு மட்டும், நடப்பு பருவத்தில் மொத்தம் 95 லட்சம் பருத்தி பொதிகளை இறக்குமதி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. துருக்கி நாடும் 35 லட்சம் பொதிகள் பருத்தியை இறக்குமதி செய்ய உள்ளது. இவை இந்தியாவிற்கு சாதகமான அம்சமாகும்.*

*ஐந்து மாதங்களில்...*

*இந்நிலையில், நடப்பு பருவத்தில், பிப்ரவரி மாதம் வரையிலான முதல் ஐந்து மாதங்களில் மட்டும் இந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பருத்தி ஏற்றுமதி 35 லட்சம் பொதிகளாக உள்ளது. நடப்பு பருவம் நிறைவடைய இன்னும் 7 மாதங்கள் உள்ளன. இதன் அடிப்படையில் பார்க்கும்போது, பருத்தி ஏற்றுமதி நிச்சயமாக 60 லட்சம் பொதிகளைத் தாண்டிவிடும் என்று தொழில் துறை வல்லுனர் ஒருவர் தெரிவித்தார்.*

*உலக அளவில், பருத்தி விலை மிகவும் உயர்ந்து வருகிறது. இவ்வாண்டில் பிப்ரவரி மாதத்திலிருந்து அமெரிக்கா மற்றும் உலக நாடுகளில் இதன் விலை மிகவும் அதிகரித்துள்ளது என்று அமெரிக்க வேளாண் துறை*

தெரிவித்துள்ளது. எனவே, வரும் மாதங்களிலும் இந்தியாவின் பருத்தி ஏற்றுமதி மிகவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேவைப்பாடு

இவ்வாறு ஏற்றுமதி அதிகரித்து வருவதால், உள்நாட்டிலுள்ள ஜவுளித் துறை நிறுவனங்களுக்கு போதுமான அளவில் பருத்தி கிடைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. நடப்பு 2009–10–ஆம் பருவத்தில் நாட்டின் பருத்தி உற்பத்தி 2.35 கோடி பொதிகளாக சற்று உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், உள்நாட்டில் பருத்திக்கான தேவைப்பாடு 1.92 கோடி பொதிகளாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆக, உள்நாட்டில் தேவைப்பாட்டை காட்டிலும் பருத்தி உற்பத்தி அதிகமாக உள்ளது.

**பிப்ரவரி மாதத்தில் தாவர எண்ணெய் இறக்குமதி 8% சரிவு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு 2010–ஆம் ஆண்டின் பிப்ரவரி மாதத்தில், நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி 7 லட்சம் டன்னாக சரிவடைந்தது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 7.62 லட்சம் டன்னாக இருந்தது. ஆக, அம்மாதத்தில், தாவர எண்ணெய் இறக்குமதி 8 சதவீதம் குறைந்துள்ளது.

எண்ணெய் பருவம் என்பது, நவம்பர் முதல் அக்டோபர் வரை கணக்கிடப்படுகிறது. இவ்வகையில், நடப்பு எண்ணெய் பருவத்தின் நவம்பர் முதல் ஜனவரி வரையிலான மூன்று மாத காலத்தில், அதிக அளவில் தாவர எண்ணெய் வகைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இதனால் கையிருப்பு அதிகரித்ததையடுத்து, சென்ற பிப்ரவரி மாதத்தில் தாவர எண்ணெய் இறக்குமதி குறைந்து போயுள்ளது என சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நடப்பு எண்ணெய் பருவத்தில், நவம்பர் முதல் பிப்ரவரி வரையிலான நான்கு மாத காலத்தில், தாவர எண்ணெய் இறக்குமதி 5.5 சதவீதம் அதிகரித்து 31.14 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 29.51 லட்சம் டன்னாக இருந்தது.

*குன்னூரில், சிறு விவசாயிகளுக்கு தேயிலை சாகுபடி குறித்து பயிற்சி*

*குன்னூர், மார்ச்.18–*

*தேயிலை சாகுபடி குறித்து சிறு விவசாயிகளுக்கு நேற்று குன்னூரில் பயிற்சி அளிக்கப்பட்டது.*

*பயிற்சி*

*தேயிலை வாரியம், உபாசி வேளாண்மை அறிவியல் மையம் ஆகியவை இணைந்து தொழில்நுட்ப வார விழாவை நடத்தி வருகின்றன. நேற்று தேயிலை சிறு விவசாயிகளுக்கு தேயிலை சாகுபடி குறித்த செயல் முறை விளக்க பயிற்சி முகாம் நடந்தது. இதற்கு உபாசி வேளாண்மை அறிவி யல் மைய திட்ட ஒருங்கி ணைப்பாளர் டாக்டர் குமார வடிவேலு தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக நீலகிரி மாவட்ட சிறு தேயிலை விவசாயிகள் சங்க தலைவர் டி.ரங்கைய்யா கலந்து கொண் டார்.*

*செயல்முறை விளக்கத்தை உபாசி வேளாண்மை அறிவி யல் மைய பொறியியல் விஞ்ஞானி ராமமூர்த்தி மற்றும் விஞ்ஞானிகள் டாக்டர் சண்முகம், டாக்டர் பாபு, டாக்டர் ஜெயகணேஷ் ஆகியோர் அளித்தனர்.*
*இதில் புதியதாக அறிமுகப் படுத்தப்பட்ட தேயிலை பறிக்கும் எந்திரம் குறித்து செயல் முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இந்த எந்திரம் மூலம் இலை பறிக்கும் போது, இலை பறிப்பதற்கான செலவு குறைந்து, விவசாயிகளுக்கு வருமானம் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.*
*வறட்சி காலங்களில் தேயிலை தோட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய சாகுபடி முறைகள் குறித்து கூறப்பட்டது.*
*சில்வர் டிப்ஸ் தேயிலை தயாரிப்பது குறித்து பொறியியல் விஞ்ஞானி ராமமூர்த்தி கூறியதாவது:–*

*சில்வர் டிப்ஸ் தேயிலை*

*நீலகிரி மாவட்டம் தரம் மற்றும் நறுமணம் மிக்க தேயிலை தயாரிப்புக்கு ஏற்ற இடமாக உள்ளது. சமீப காலமாக சிறப்பு வாய்ந்த தேயிலை தயாரிப்பை அதிகப்படுத்துவற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இது தொடர் பாக சில்வர் டிப்ஸ் தேயிலை தயாரிக்க பல பரி சோதனைகள் செய்யப்பட் டன. அவ்வாறு மேற் கொள்ளப்பட்ட பரிசோ தனையின் அடிப்படையில் சில்வர் டிப்ஸ் தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.3 ஆயிரம் முதல் ரூ.6 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகிறது.*
*ஒரு ஏக்கர் தேயிலை தோட்டம் வைத்து இருப்ப வர்கள் கூட ஆண்டுக்கு ரூ.1 லட்சம் வரை வருமானத்தை பெறலாம். இதற்கு தேயிலை தொழிற்சாலைகள் தேவை யில்லை. இதனை குடிசை தொழில் போன்று செய்ய லாம். இவ்வாறு அவர் கூறினார்.*

# வேளாண்மை செய்திகள்

## மரக்கன்றுகளை தாக்கும் நோய்களும்-தீர்வுகளும்

சிறந்த மரத்தோட்டங்களில் நல்ல தரமான மரக்கன்றுகளின் உற்பத்தி மிகவும் அவசியம். பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்குவதால் நாற்றங்கால்களில் உள்ள மரக்கன்றுகள் வீரிய தன்மையை இழந்து அழிந்துவிடுகின்றன. இதனால் பொருளாதார ரீதியாக விவசாயிகள் பாதிப்பு அடைகின்றனர். இதை தவிர்க்க நாற்றங்களில் காணப்படும் நோய்களை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டியது அவசியம்.


நோய் தாக்கப்பட்ட மரக்கன்றை படத்தில் காணலாம்.

### நோய்களும்-அறிகுறிகளும்

மரக்கன்றுகளை தாக்கும் நோய்கள் தொற்று நோய்கள், தொற்றில்லா நோய்கள் என்று இரண்டு வகைப்படும். தொற்று நோய்கள் என்பவை நுண்ணுயிரிகளான பூஞ்சைகள், பாக்டீரியக்களால் ஏற்படுகிறது. தொற்றில்லா நோய்கள் என்பவை மண்ணின் கார, அமிலத்தன்மை, சூரிய வெப்பம், பனி, மண்ணின் முக்கிய சத்துக்களின் குறைபாடு அதிகப்படியான ஈரத்தன்மையால் ஏற்படுகிறது. இந்த நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் முழுமையாக தீர்வு காண முடியும்.

ஒரு பூஞ்சையோ அல்லது பாக்டீரியாவோ மரக்கன்றுகளை தொற்றும்போது அவை சில அறிகுறிகளை வெளிப்படுத்தும். இலைகளில் மஞ்சள் நிறம் தென்படுதல், இளந்தண்டுகள் கருகுதல், இலைகள் வாடி வதங்குதல், நாற்றுகள் உடைந்து போகும் தன்மையுடன் இருத்தல், இலைகள் உதிர்தல் போன்றவை. இந்த அறிகுறிகளை வைத்து மரக்கன்றுகள் பாதிக்கப்பட்டுள்ளதா? என்று பரிசோதித்து தெரிந்து கொள்ளலாம்.

### நோய்களை கண்டறிதல்

ஒரு மரக்கன்று நோயால் பாதிக்கப்பட்டால் அதன் திசுக்கள் பெரிய அளவில் பாதிக்கப்படும். திசு இறப்பு, திசுவின் தேவையற்ற வளர்ச்சி, திசுவின் போதுமான வளர்ச்சி இன்மை போன்ற 3 வகையான பிரச்சிகளை வைத்து நோய்களை கண்டறியலாம். நோயை கட்டுப்படுத்துவதை விட நோய் வராமல் பாதுகாப்பதே சிறந்தது.

நாற்றங்கால்களை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் வைத்திருத்தல், மணலை மட்டுமே விதை பாத்திகளில் பயன்படுத்துதல், நீர் தேங்காமல் பார்த்துகொள்ளுதல், பூச்சிகள் வராமல் தடுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதிக ஈரப்பதத்தால் சில பூஞ்சைகள் விதைகளை தாக்கி நோயை உண்டாக்குகின்றன. இதற்கு விதைகளை துணி பைகளில் சேகரித்து வைத்து ஈரம் தாக்காமல் பார்த்து கொள்ள வேண்டும்.

### கட்டுப்படுத்தும் முறைகள்

நோய் தாக்கப்பட்ட விதைகளில் பூஞ்சைகள் படிந்திருக்கும். விதைகள் கருப்பு அல்லது பழுப்பு நிறத்தில் இருக்கும். செரிசான் என்னும் மருந்தை 1 கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் கலந்து வைத்தால் விதை நோயை கட்டுப்படுத்தலாம். தேக்கு நாற்றுகளை தாக்கி வாடல் நோயை உண்டாக்கும் பாக்டீரியாக்களை பிளேன்டோமைசின் என்னும் மருந்தை தெளித்து கட்டுப்படுத்தலாம். வேர் அழுகல் நோயை டைத்தேன் எம்45 என்ற பூஞ்சாண கொல்லியை தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்.

இலை முழுவதும் பவுடர் பூசியதுபோல் காணப்படும் இலை துரு நோயை பிளேண்டோமைசின், டைத்தேன் எம்45 மருந்துகள் மூலம் அழிக்கலாம். நாற்று இறப்பு மற்றும் இலை மற்றும் தண்டு வாடல் நோயை கட்டுப்படுத்த பாவிஸ்டன் 0.1 சதவீத கரைசலையும் பயன்படுத்தலாம். மேற்கண்ட முறைகளை பின்பற்றினால் நாற்றங்காலில் மரக்கன்றுகளை தாக்கும் நோய்களுக்கு தீர்வு காணலாம்.

-தகவல்: ஏ.கார்த்திகேயன், வன மரபியல் மற்றும் மரப்பெருக்க நிறுவனம், கோவை.

## ரத்த அழுத்த நோய்க்கு மருந்தாக பயன்படும் 'கூர்க்கன்' கிழங்கு

கோலியஸ் என்று அழைக்கப்படும் 'கூர்க்கன்' ஒரு அரிய வகை மூலிகை பயிராகும். குறுகிய காலத்தில் வளரும் தன்மை கொண்ட இந்த பயிர் இந்தியா, ஆப்பிரிக்கா, அரேபியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளில் பரவலாக பயிரிடப்படுகிறது. மருத்துவ தன்மை கொண்ட இந்த பயிர் இந்தியாவில் தமிழ்நாடு, குஜராத் மற்றும் கர்நாடக மாநிலங்களில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டை பொறுத்தவரை சேலம், நாமக்கல், ஈரோடு ஆகிய பகுதிகளில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

### வேர்பகுதி

கோலியஸ் என்ற பெயரில் அழைக்கப்படும் 'கூர்க்கன்' செடிகள் 60 முதல் 90 சென்டிமீட்டர் வரை வளரும் தன்மை கொண்டது. இதன் தண்டுகள் மெல்லியதாகவும் இளம் பச்சை நிறத்திலும் இருக்கும். இந்த செடியின் வேர்பகுதி தான் மருத்துவ தன்மை கொண்டது. வேர்கிழங்கு பகுதியில் இருந்துதான் போர்ஸ்கோலின் என்ற வேதிப் பொருள் உள்ளது. காய்ந்த வேர்கிழங்கில் இருந்து எடுக்கப்படும் போர்ஸ்கோலின் ரத்த அழுத்தம், கண்களின் ஏற்படும் குளுக்கோமா, ரத்த குழாய்களில் ஏற்படும் நோய்களை குணப்படுத்தும் மருந்தாக பயன்படுகிறது.

### சாகுபடி முறை

செம்மண் அல்லது சரளை வகை மண் உள்ள இடத்தில் இந்த பயிரை சாகுபடி செய்யலாம். நல்ல மணற்பாங்கன மண்வகைகள் மிகவும் நல்லது. ஆண்டுக்கு 65 சென்டிமீட்டர் முதல் 160 சென்டிமீட்டர் வரை மழையளவு உள்ள சமவெளி பகுதிகளில் இந்த பயிரை சாகுபடி செய்யலாம். வறட்சியான பகுதிகளில் சொட்டுநீர் பாசன வசதியோடு பயிர் செய்யலாம்.

நுனித்தண்டுகள் மூலம் கூர்க்கன் கிழங்கை நடவு செய்யவேண்டும். 3 அல்லது 4 கணுக்கள் உடைய 20 சென்டிமீட்டர் நீளம் உள்ள நுனித்தண்டுகள் நடவுக்கு போதுமானது. இரண்டு அல்லது 3 முறை உழி கலப்பை கொண்டு நிலத்தை உழவு செய்யவேண்டும். மண்கட்டிகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். 60 சென்டிமீட்டர் இடைவெளியில் பார்கள் அமைத்து பார்களின் பக்கவாட்டில் நுனித்தண்டுகளை 30 சென்டிமீட்டர் இடைவெளியில் நடவு செய்யவேண்டும். ஜூன் மற்றும் ஜூலை மாதங்கள் நடவு செய்ய ஏற்ற மாதங்கள் ஆகும்.

### நீர்பாசனம்

செடிகளை நட்ட முதல் மாதத்தில் இருந்து வாரம் ஒருமுறையும், பிறகு 10 நாட்கள் இடைவெளியிலும் நீர் பாசனம் செய்ய வேண்டும். கிழங்குகளை அறுவடை செய்வதற்கு 15 நாட்கள் இருக்கும் போது கடைசி பாசனத்தை நிறுத்தி விடவேண்டும்.

பயிரின் முதல் இரண்டு மாத கால பருவத்தில் களைகளை கட்டுப்படுத்தினால் நல்ல மகசூல் கிடைக்கும். எனவே களையின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு கைகளால் களை எடுப்பது நல்லது.

### வேர் அழுகல் நோய்

இந்த செடியை பொறுத்தவரை வேர்புழுக்கள், நூற்புழுக்கள் அதிகம் தாக்க வாய்ப்பு உள்ளது. எனவே எக்டேருக்கு 200 கிராம் வேப்பம் புண்ணாக்கை அடியுரமாக இடுவது நல்லது. இந்த செடியை தாக்கும் நோய்களில் முதன்மையானது வேர் அழுகல் நோய் ஆகும். இந்த நோய் தாக்கிய செடிகளின் இலைகள் பழுப்பு நிறத்தில் காணப்படும். நோயின் தீவிரம் அதிகமாகும் போது செடிகள் முழுவதும் காய்ந்து விடும். இதை கட்டுப்படுத்த டிரைக்கோ டெர்மா விரிடி என்ற பூஞ்சாணக் கொல்லி மருந்தினை ஏக்கருக்கு 2 கிராம் வீதம் தொழு உரத்துடன் கலந்து 20 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை மண்ணில் செடிகளை சுற்றி இடுவதால் இந்த நோயை கட்டுப்படுத்த முடியும்.

தகவல்:- ஏ.கபீர், வேளாண்மை ஆலோசகர், வேளாண்மை நிலையம், தாராபுரம்.

## வேளாண்மை கேள்வி - பதில்

கேள்வி: நான் எனது விளைபொருட்களை இடைத்தரகர் இல்லாமல் நேரடியாக விற்பனை செய்ய விரும்புகிறேன். என்ன செய்யலாம்? ராமு, சூலூர்.

பதில்: தற்போது சிறு விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் இணையதளத்தில் நேரடியாக விற்பனை வாய்ப்பு வசதிகள் வந்து விட்டன. குறுந்தகவல் முறையிலும் இங்கு உங்கள் விளைபொருட்கள் பற்றி விவரங்களை பதிவு செய்து கொள்ளலாம். இது பற்றி விபரம் அறிய விவசாயம் தொடர்பான இணைய தளங்களை பார்வையிடவும். அரசு சார்ந்த இணைய தளங்கள் விவசாயிகளுக்கான ஏராளமான தகவல்களை தருகின்றன. கூகுள் தேடு பொறியில் அக்ரிகல்சர் என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் தேடினால் தமிழ் தளங்களும்